சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

Vol IX. தொகுதி கூ. | October 1913. அக்டோபர் 1913. | No 3 பகுதி ௩.

பெண் கல்வியின் தற்கால நிலைமை.

இக்காலத்தி லேற்பட்டிருக்கும் பெண் பாடசாலைக்களில் கற்பிக்கப் படும் பாடங்கள் நமது பெண்களுக்குப் பிற்காலத்தி லுபயோகப்படுவன வல்ல வென்பது யாவருமறிந்த விஷயமே. பெண்கள் அத்தியாவசியகமாகக் கற்க வேண்டுவன அவர்கள் தாய்மார்களாகுங் காலத்து மிகுதியும் உபயோகப் படுவனவா யிருத்தல் வேண்டும். அவை நற்குண நற்செய்கைகள் பெறக்கூடிய கல்வியும், சுகாதார சம்பந்தமான கல்வியும், பாக சாஸ்திர சம்பந்தமான கல்வியும், தையற் றொழிற்பயிற்சியும், சித்திரத் தொழிற் பயிற்சியும் பிறவுமாம். இவ்விதமான கல்வி பெண் பாடசாலைகளிற் கற்பிக்கப்பட்டு வருமாயின், அவை நமது பெண்களுக்கு இகலோக சாதனமாவ தன்றிப் பரலோக சாதனமுமாம். இவ்வாறுய கல்வி தற்காலத்துப் பெண் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதே யில்லை. தற்காலத்தி லேற்பட்டிருக்கும் பாடசாலைகளில் பெண்கள் நாடகம் நடிப்பதிலும், சங்கீதம் பயில்வதிலுமே தமது காலத்தை வீணாகக் கழிப்பவரா யிருக்கின்றனர். இவை பெண்களுக்கு நற்குண நற்செய்கைகளை யுண்டாக்குவதற் கேதுவாவன வல்ல வென்பதை யொருவரு மறியா திருக்கின்றனர். சிறு பெண்களுக்கு யானை பூனைப் படங்கள் கற்பிக்கப் படுகின்றனவே யன்றித் தெய்வ வழிபாடும், நீதி நெறியுமடங்கிய ஆத்திசூடி கொன்றை வேந்தன் முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுவதே யில்லை. சிறு பிள்ளைகள் பாலியத்திற் கற்குங் கல்விதான் பசுமரத் தாணி போன்று புத்தியிற் பதிகின்ற தென்பது பிரசித்தமாம். இவ்விஷயத்தைக் கல்விச்சாலைத் தலைவர்களும், பெண்களைப் பெற்றோரும் கவனிப்பதே யில்லை. தற்காலத்தி லேற்பட்டிருக்கும் பெண் பாடசாலைகள் பலவாறுய திருத்தம் பெறுதல் வேண்டும்.

1 பெண் பாடசாலைகளில் புருஷர் சம்பந்தமே யிருத்தல் கூடாது. ஸ்திரீகளே உபாத்தியாயர்களா யிருத்தல் வேண்டும். ஆனாலிப்போது

ஸ்திரீகளும் புருஷர்களும் உபாத்தியாயர்களா யிருக்கின்றனர். இவ்வேற்பாடு முற்றிலும் ஒழிக்கப்படவே வேண்டும்.

2. முதலில் பெண்களுக்கு அவரவர் வழக்கத்திலுள்ள பாஷைகளில் எண்ணும் எழுத்தும் கற்பித்தல் வேண்டும்; அவ்வாறன்றி, இப்போது எழுத்துக்களைக்கற்பிக்காமலே சொற்களைக் கூட்டக் கற்பித்தல் அஸ்திவாரமில்லாது கட்டடங் கட்டுவது போலவாம்.

3. பின்னர்ச் சித்திரத் தொழிலும், அறநூல்களாகிய ஆத்திசூடி முதலியனவும் கற்பித்தல் வேண்டும்.

4. நமது புராண இதிகாசங்களையே பாலபாடங்களாகக் கற்பித்தல் வேண்டும். கணிதமும் ஸ்திரீகளுக்கு வேண்டிய அளவாகக் கற்பித்தல் வேண்டும்.

5. தையற்றொழிலும், சுகாதார சம்பந்தமான பால பாடங்களும், பாகசாஸ்திர சம்பந்தமான பால பாடங்களும் கடைசியாகக் கற்பித்தல் வேண்டும்.

இவ்வேற்பாட்டின் பிரகாரம் பாடசாலைகளேற்பட்டுப் பெண்கள் கற்பிக்கப் படுவார்களாயின், அவர்கள் பிற்காலத்தில் நற்குண நற்செய்கைகளுள்ள ஸ்திரீகளாவது மன்றி, தமது புருஷர்களுக்குக் குடும்ப நிர்வாகத்தில் பேருதவியாகவு மிருப்பார்கள்.

புராணேதிகாசங்களைக் கற்பது ஆஸ்திக புத்தியும் நற்குண நற்செய்கையு முண்டாவதற் கேதுவாம். சுகாதார விதிகளைக் கற்பது தேக சுகம் பெறுவதற் கேதுவாம். பாகசாஸ்திரங் கற்பது நல்லுண்டி சமைப்பதற்கேதுவாம். தையற்றொழில் கற்பது தமது உடைகளைத் தாமே தைத்துக் கொள்வதற்கேதுவாம்; பொருள் வருவாயின்றிய காலத்து ஜீவனம்சவதவுமாம். சித்திரத் தொழில் கற்பது புத்தி விர்த்திக்கேதுவாவது மன்றிப்பொருள் சம்பாதிப்பதற்கேதுவுமாம். ஸ்திரீகளே புருஷசம்பந்த மில்லாது உபாத்தியாயர்களாக விருந்து நடத்தும் பாடசாலைகள் மேற்குறித்த வற்பாடுகளோடு வற்படுமாயின், பெண்கள் 10-12 வயது வரும் வரையில் படாசாலைகளுக்குச் சென்று கல்வி பயில்வது கூடும். அப்போது பெண்கள் எண்ணிலும், எழுத்திலும், கைத்தொழிலிலும் போதுமான அளவு பயிற்சி பெறுதல் கூடும்; பாடசாலையில் பெற்ற பயிற்சியி னுதவியைக் கொண்டு தமது கணவர்பால் விர்த்தி செய்து கொள்ளுவதும் கூடும். இவ்வாறு தேர்ச்சி பெறும் பெண்கள் அதிகரிப்பார்களாயின், குடும்பக்ஷேமத்திற்கும் தேசக்ஷேமத்திற்கு மேதுவாம். மேற் கூறியவாறு கல்விப் பயிற்சி பெற்றவர்கள் தமது பிள்ளைகளை நற்குண நற்செய்கைகளிற் செலுத்தும் வாயிலாகத்தேசக்ஷேமத் திற்கு மேதுவா யிருப்பார்கள்; தமது கணவர்கள் அறநெறியினின்று தவறுங்காலத்து அவர்களுக்குச்சற்போதனைசெய்து நல்வழியிற்செலுத்தும் வாயிலாகவும், வருவா யின்றிய காலத்துக் கைத்தொழில் செய்து பொருள்

சம்பாதிப்பது வாயிலாகத் தமது கணவருக்கு ஊன்றுகோல் போல் நின்றுதவுவதுவாயிலாகவும் குடும்பக்ஷேமத்திற் கேதுவாக விருப்பார்கள்.

தற்காலத்திலோ, பெண்கள் 7-8 வயதிலேயே வீட்டில் நிறுத்தி விடப்படுகின்றனர். அதனால் 2-3 வருஷங்களில் பாடசாலைகளிற் கற்ற கல்வி ஒருவாற்றானும் உபயோகப் படுவதில்லை. இச்சிறு காலத்திற் கற்ற கல்வியினால் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்யாது பெரியோர்களை மதிக்காது சீர் கெட்டுப்போகின்றனர். தற்காலத்தில் பெண்கள் பெறுங் கல்வி அவர்களுக்குக் கேட்டை விளைவிப்பதாக விருக்கின்றதேயன்றி, அறிவை விளைவிப்பதாக வில்லை; உயிரில்லா உடம்பு போன்றிருக்கின்றது. இவ்விதமான கல்வியைக் கொடுத்துப் பெண்களைக் கெடுப்பதைப் பார்க்கினும், அவர்களைக் கல்வியிற் பயிற்சி பெறச் செய்யாது அறிவீனர்களாக வீட்டிலேயே வைத்திருப்போமாயின், அவர்கள் நமது குலாசார மதாசார வழக்கங்களை யநுஷ்டித்து வருவது வாயிலாக ஒருவாறுமேன்மை பெறுதல் கூடும். முற்காலத்துப் பெண்கள் கல்வியறிவிலராயினும் குணவதிகளாக விருந்தனர். இப்போதோபெண்கள் எழுதவும்படிக்கவும் தெரிந்து கொண்டதனாலேயே தாம் மேன்மை பெற்று விட்டோமென்று மமதை கொண்டு, குணவதிகளென்னும் பேர் பெறாது சீரழிகின்றனர். பெண்கள் சீர் குறைவதற்குக் காரணம் பெற்றோர்களே யாமாதலின், அவர்கள் இனியேனும் தமது பெண்களை நல்லவழியிற் செலுத்தும் மார்க்கங்களைக் கற்று நடத்துவது ஆவசியகமாம். தற்காலத்தி லேற்பட்டிருக்கும் பெண்பாடசாலைகள் நமது பெண்கள் விர்த்தியடைவதற்கேதுவான முறைமைகளையனுசரித்தனவாகவில்லை. ஆதலினால், இப்போதிருக்கும் பாடசாலைகளைச் சீர்பெறச் செய்தல் வேண்டும்; இவ்வாறு செய்வது ஒவ்வோரிந்துவின் கடமையாம்.

சநாதநமாநவ தர்மம்.

(முன்தொடர்ச்சி)

சிரேஷ்டத்வம்.

பொருள், பந்து, ஸம்பந்தம், வயது, செய்கை, வித்தை ஆகிய இவை பூஜிக்கத் தக்கவை. இவற்றுள், பொருளைவிடப்பந்து ஸம்பந்தம் மேலானது; பந்து சம்பந்தத்தைவிட வயது மேலானது; வயதைவிடச்செய்கை மேலானது; செய்கையை விட வித்தை மேலானது. 1

புருஷனுடைய சிரசு நரைத்ததால் மாத்திரம் அவன் பெரியவனாக மாட்டான். எவன், யௌவன பருவமுடையவனாயினும், அத்யயனம் செய்தவனோ, அவனைத் தான் தேவர்கள் பெரியவனென்று அறிகின்றார்கள். 2

புருஷார்த்த ஸாதநம்.

இந்திரியங்களை ஸ்வாதீனப் படுத்தி மனதை யடக்கி உபாயத்தால் சரீரத்தை விடாமல் புருஷார்த்தங்கள் யாவற்றையும் தேட வேண்டும். 1

தர்மம் அர்த்தம் என்னும் இவ்விரண்டும் ஸ்ரேயஸ்ஸென்றுசொல்லப் படுகின்றன. 2

காமம், அர்த்தம், தர்மம் என்னுமிவை ஸ்ரேயஸ் ஸுள்ளவை என்று சொல்லப்படுகின்றன. அர்த்தம் என்பது மாத்திரம் நன்மையுள்ளது. இந்தப் புருஷார்த்தங்கள் மூன்று வகையின வென்பது நிச்சயம். 3

இந்திரிய ஜயம்.

மனிதன் இந்திரியங்களின் ஸம்பந்தத்தால் தோஷ மடைகின்றான். அவற்றை யடக்கித் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் இந்த ஸித்திகளை யடைகின்றான். 1

அபஹரிக்கக் கூடிய விஷயங்களில் நடமாடும் இந்திரியங்களை யடக்குவதில் வித்வான் குதிரைகளை யடக்குவது போல முயற்சிக்கவேண்டும். 2

காமமானது விஷயங்களை யனுபவிப்பதால் எப்பொழுதும் நிவிர்த்தி யடையாது. 3

அது ஹவிஸ்ஸால் அக்னி விர்த்தியடைவதுபோல மறுபடியும் விர்த்தி யடைகின்றது. 4

எவன் காமங்களெல்லா வற்றையும் அடைகின்றானோ, எவன் காமங்களை முக்கியமாய்த் தள்ளுகின்றானோ இவ்விருவரின் சார்பத்தை விடக் காமம் யாவற்றையும் அடைந்து த்யாகம் செய்வதுவே விசேஷம். 5

விஷயங்களில் பற்றுதலுடைய இந்திரியங்களை ஞானத்தால் எப்போதும் நிவாரணம் செய்து கொள்வது போலக் காமங்களை அடையாமலே இவற்றை நிவிர்த்தி செய்தல் முடியாது. 6

இந்திரியங்களுள் ஓர் இந்திரியம் தவறினால், இவனுடைய அறிவு தோற் பையிலிருந்து ஒழுகும் ஜலம் போல(வீணே) போகின்றது. 7

காமக் குரோதங்களின் வசமாயினேன் வித்வானாயினும் அவித்வானாயினும், அவனை உலகில் துன்மார்க்கத்திற் சேர்ப்பதற்கு ஸ்திரீகள் திறமையுள்ளவர்கள். 8

தாயார் ஸஹோதரி புத்திரி என்னும் இவர்களுடனும் மனிதன் தனித்திருப்பானாயின், இந்திரியங்கள் வலுவுள்ளனவாகையால் அவன் வித்வானாயினும் அவை அவனைத் (தம்வழி) இழுத்துவிடும். 9

விஷயங்கள் எல்லாவற்றிலும் இஷ்டம் போலப் பற்றுதலடைதல் கூடாது. 10

இவற்றினிடம் (உண்டாகும்) மிகுந்த பற்றுதலையும் மனதால் திருப்ப வேண்டும். 11

ஆரோக்ய மில்லாததும், ஆயுளில்லாததும், ஸ்வர்க்க மில்லாததும், புண்யமில்லாததும், உலகத்வேஷ மூலமாகிய மிகுந்த போகத்தைத் த்யாகம் செய்யவேண்டும். 12

புருஷனுக்குப் பிறர் மனைவியை அடைவதுபோல ஆயுளைக் குறைக்கும் காரியம் உலகில் எதுவுமில்லை. 13

பொறுமை.

துன்பமுடையவனுயினும், க்ரூரனுகவும், பிறருக்கு த்ரோஹம் செய்வதில் புத்தியுள்ளவனுகவும் இருத்தல் கூடாது. 1

இவன் தன்னுடைய வாக்கினுல் பிறர் நடுங்கும்படி ஸ்வர்க்க கதிக்குத் தடையாயுள்ளதைச் சொல்வது கூடாது. 2

அவமதிப்படைந்தவன் ஸுகமாகச் சயனிக்கின்றான்; ஸுகமாகவிழிக்கின்றான்; இவ்வுலகில் ஸுகமாகச் சஞ்சரிக்கின்றான். அவமதித்தவன் நாசமடைகின்றான். 3

அஹிம்ஸை.

எவன் தன் ஸுகத்தில் விருப்பங்கொண்டு ஹிம்ஸைசெய்யாதவர்களை ஹிம்ஸிக்கிறானே அவன் ஜீவனுடனிருப்பவனுயினும், மரணமடைந்தவன் தான்; எப்பொழுதும் ஸுகத்தையடைய மாட்டான். 1

எவன் ப்ராணிகளைக் கட்டவும், வதை செய்யவும், க்லேசப்படுத்தவும் விரும்பாம லிருக்கின்றானே, எல்லாருக்கும் ஹிதத்தைக் கோருகின்றானே அவன் மிகுந்த சுகத்தை யடைகின்றான். 2

எந்த வஸ்துவை த்யானிக்கின்றானே, எந்தக் கர்மங்களைச் செய்கின்றானே, எதைக் கருதித் தைர்யம் கொள்ளுகின்றானே அந்தப் பலனை (அவன் ஒருவித) யத்ன மில்லாமலே ஒருவனையும் ஹிம்ஸிக்காம லிருந்தால் அடைகிறான். 3

ப்ராணிகளை ஹிம்ஸிக்சாமல் எப்போதும் மாம்ஸம் கிடைப்பதில்லை. ப்ராணிவதை என்பது ஸ்வர்க்கத்திற்குரியதாகாது. ஆகையால் மாம்ஸம் புசிப்பதை விட வேண்டும். 4

மாம்ஸம் கிடைப்பதையும் ப்ராணிகளுக்கு வதையையும் பந்தத்தையும் கவனித்து, மாம்ஸமொன்றையும்புசிக்கக்கூடாதென்று நிவிர்த்தியடைதல்வேண்டும். 5

ஸுக துக்கங்கள்.

சுகத்தை யபேக்ஷித்தவன் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்து கட்டுள்ளவனுக இருக்கவேண்டும். ஸுகம் ஸந்தோஷத்தாலுண்டாகவேண்டும்; கஷ்டம் துக்கத்தா லுண்டாகக் கூடியது. 1

பராதீனமான கார்யத்தை முயற்சியுடன் த்யாகம் செய்யவேண்டும்; ஸ்வாதீனமாகிய கார்யத்தை முயற்சியுடன் செய்யவேண்டும். 2

பரவசமாக உள்ளன யாவும் துக்கந்தான்; ஸ்வாதீனமான யாவும் ஸுகந்தான். இது ஸுகதுக்கங்களுக்கு லக்ஷணமென்று சுருக்கமாகத் தெரிந்துகொள்ளல் வேண்டும். 3

ஆதித்யம்.

(க்ராமாந்தரத்தி விருந்து) வந்தவனாகிய அதிதிக்கு ஸத்காரத்தை முன்னிட்டுச் சக்திக் கனுகுணமாக ஆஸனம் ஜலம் அன்னம் இவைகளைக் கொடுக்கவேண்டும். 1

த்ருணங்கள் பூமி ஜலம் ப்ரியமான பேச்சு என்னுமிந் நான்கும் ஸாதுக்களின் க்ருஹத்தில் எப்பொழுதும் வருகிறதில்லை. 2

மாலையில் ஸூர்யன் அஸ்தமனமாகும்போது வந்த அதிதியை க்ருஹஸ்தன் அநாதரவு செய்வதுகூடாது. 3

காலத்தில் வந்தாலும் அகாலத்தில் வந்தாலும் மற்றவர்களுக்குப்போஜனம் செய்விக்காமல் க்ருஹத்தி விருத்தல்கூடாது. 4

எந்த வஸ்துவை அதிதிக்குப் போஜனம் செய்விக்கவில்லையோ அதைத் தான் புசித்தல்கூடாது. அதிதிகளைப் பூசிப்பது தன்யம்; யஸஸ்ஸுள்ளது; ஆயுளைக்கொடுக்கும்; ஸ்வர்க்கத்தைக்கொடுக்கும் 5

ஆஸனம் வாஸஸ்தானம் சயனம் கமனம் ஸத்காரம் என்னுமிவற்றை உத்தமர்களிடம் உத்தமமாகவும், குறைவுள்ளவனிடம் குறைவாகவும், ஸமனாகியவனிடம் ஸமமாகவும் செய்யவேண்டும். 6

எவர்கள் புத்தியின்றிப் பிறருடைய அன்னத்தை அவஸ்யமின்றிப்புசிக்கிறார்களோ அந்தக்கிருஹஸ்தர்கள் அதனால் மறு ஜன்மத்தில் அன்னம்முதலியவற்றைக் கொடுப்பவர்களுக்குப்பசுத்தன்மையை அடைகின்றார்கள். 7

ஆப்தரக்ஷணம்.

கொடுக்கச் சக்தியுள்ளவனாக இருப்பவன் தன்னைச்சார்ந்தவர்கள் துக்கத்துடன் ஜீவித்திருக்கும்போது பிறர்க்குப்பொருள் கொடுக்கின்றானே அவன் அமுதமிருக்க விஷத்தை யுபயோகிப்பவனாவான். அது தர்மம் போன்றதே யொழிய உண்மையான தர்மமல்ல. 1

கன்யா விக்ரய நிஷேதம்.

வித்வானாகிய தகப்பன் கன்னிகையை யுத்தேசித்து அணுவேனும் பொருள் வாங்குவதுகூடாது. லோபகுணத்தால் பொருள் வாங்குவானாயின், அவன் பெண்ணை விக்ரயப்படுத்தியவனாகிறான். 1

எந்தப்பாபி ஜனங்கள் மோஹத்தால் ஸ்திரீகளின் பொருட்களைக்கொண்டு ஜீவிக்கின்றார்களோ, ஸ்திரீகளின் வாஹனங்களையாவது வஸ்திரத்

தையாவது உபயோகித்துக்கொள்ளுகின்றார்களோ, அந்தப் பாவிகள் அதோகதி யடைவார்கள். 2

ஸ்திரீகளிடம் இருக்கவேண்டிய ப்ரகாரம்

வெகுவான மங்களத்தை விரும்புகிற தந்தை ஸஹோதரன் கணவன் கொழுந்தன் என்னும் இவர்கள் ஸ்திரீகளைப் பூஜிக்கவேண்டும்; அலங்காரஞ் செய்யவேண்டும். 1

நடேச சாஸ்திரியார்.

காதரைன்.

(முன்தொடர்ச்சி)

இரண்டாங் களம்.

இடம்:—ஒருகிராமத்திற்குச் செல்லும் ஒரு பெரிய நீண்ட சாலை. (Road)

பாத்திரங்கள்:-கந்தைத் துணி யுடுத்தின களைப்புவாய்ந்த ஒரு ஸோல்ஜர் கூட்டம் மெல்ல நகர்கிறார்கள். ஸார்ஜண்ட் அவர்களை வரிசையாய் நடத்துகிறான்.

ஸார்ஜண்ட்:-என் அருமை யுத்தவீரர்காள்! தைரியமாய் நடவுங்கள். தைரியத்தைக் கைக்கொள்ளுங்கள். நாம் இன்னும் வெகுதூரம் போகவேண்டுமே. அதோ அந்தக் கிராமத்தின் வழியாய்ப் போவோமாக!

(டிரம்மைப் பலமாக அடித்துப் போகிறார்கள்.)

ஸோல்ஜர்கள் மறைகிறார்கள்.

(தனியாய்) ஐயோபாவம்! அவர்களைப்பார்க்க என் ஆவி பதறுகின்றதே; என் மனம்குழம்புகின்றதே; என் இரத்தம் சுண்டுகின்றதே! அவர்கள் முன்போல இல்லாமல் தற்போது ஒச்சலாக நடக்கின்றனர். வெகு கம்பீரமான அவர்கள் நடையையும் என் கண்ணாலேயே கண்டிருக்கின்றேன். நானும் அவர்கள் மத்தியில் நிமிர்ந்ததலையனாய் (சத்ருவரை எதிர்க்கும்போது) பலத்த அடிகளை வைத்து இவ்விதமாகக் 'க்விக்டைம்மார்ச்' Quick time march (வெகுகம்பீரமாய் நடக்கிறான்) என்று போனவனாயிற்றே. ஐயோபாவம்! பரிதபிக்கத்தக்க ஸோல்ஜர்களே! தற்சமயம் தயங்கித் தயங்கி நடக்கிறார்கள் தெரிகிறதா!

(அவர்களைப் பார்த்துக்கொண்டே)

ஐ ஐ (*ay ay*) அதோ அங்கே மெல்ல நகர்கிறார்கள். அந்தக்கிராமத்தின் வழியே அவர்களுக்குப்போக இஷ்டமேயில்லைபோலும்! எனக்கோ, அப்படித்தான். நாம் செல்லும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பெண்டிரும் குழந்தைகளும் ஓடிவந்து "என் புருஷனைப்பற்றிய விஷயம் என்ன? எங்கள் தந்தை எங்கே? எப்போது வருவார்? சௌக்கியமா?" என்று என்னை அடிக்கடி வற்புறுத்துகிறார்கள். தடித்த உலக்கையும் மேலும் ஸார்ஜண்டுமான நான் (பிறர்க்குஅறிவுறுத்தவேண்டியவன்)

இவ்விதக் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லிச் சாத்தியப்பட வில்லை.

(பெருமூச்செறிந்துகொண்டே 'காதரைன்' ஓடிவருகிறாள்.)

காதரைன்:-நான்-நான்-நான் (அப்பாடா) இப்போதுதான் அவரைப்பிடித்தேன். ஸார்! மிஸ்டர் ஸார்ஜண்ட்! ஒரே ஒரு வார்த்தை. பின்லண்டிலிருந்து என்ன சமாச்சாரம் வந்திருக்கிறது?.

ஸார்ஜண்ட்:-எல்லாம் நல்ல சமாச்சாரந்தான், சண்டைகள் முற்றுப்பெற்றன. எங்கும் சமாதானமே தலைகாட்டி யிருக்கிறது.

காதரைன்:-(தன் கைகளைக் கொட்டிக்கொண்டே சந்தோஷமாய்) சமாதானமா! சண்டைகள் முற்றுப்பெற்றனவா! நன்று. நன்று. ஹெல்மாரின் ரெஜிமண்டோ!

(ஸார்ஜண்ட் வெகு அவசரப்படுகிறான். போகிறான்.)

ஸார்! இன்னும் ஒரேவார்த்தை. மிஸ்டர் ஸார்ஜண்ட்! எப்போது ஹெல்மாரின் ரெஜிமெண்ட் திரும்பிவரும்?

ஸார்ஜண்ட்:-அங்கு இருக்கும் மீதி வீரர்கள் அடுத்தவாரம் கட்டாயம்வந்து சேருவார்.

காதரைன்.-அடுத்த வாரமா! சரி. மீதி இருக்கும் வீரர்கள் என்றீரே, அப்படியானால் எத்தனைபேர் மாண்டொழிந்தனர். அறிவீரா?

ஸார்ஜண்ட்:-அநேகம்பேர்கள். எண்ணமுடியாதபேர்கள். சில நல்லகுடியானவர்கள்சண்டையில் இறந்துபோனவர்களுடையதோற்பைகளை எடுத்து வருகிறார்கள். அவர்கள் விட்டுப்போனவற்றை அவர்கள் வீட்டில் கொண்டுபோய்க்கொடுக்குங் காரியம்மெச்சத்தக்கதே. சரி. இப்போது நான் போய்வருகிறேன்.

காதரைன்:-ஒரேவார்த்தை ஸார்! ஹெல்மாரின் ரெஜிமண்டில் ஒருவர்பெயர் கிறிஸ்டியர்ன் அலெப்ட்டஸன். அவரைப்பற்றித் தங்களுக்குத் தெரியவருமோ!

ஸார்ஜண்ட்:-யுத்தகளத்தில் உள்ள வீரர்களுக்குள் மிகுந்ததைரியமும்யோக்கியனுமாயும் இருந்த கிறிஸ்டியர்ன் அலெப்ட்ஸனையா! ஒருவேளை எனக்குத் தெரிந்த அவன்தானோ என்னவோ?

காதரைன்:-உள்ள வீரர்களுள் மிகுந்த தைரியமும் யோக்கியமும் அமைந்து இருந்த அவர் தான் என்புருஷர். அவர் இப்போது எங்கே?

ஸார்ஜண்ட்:-(ஒருபக்கமாய்) இது வதடா! இவள் என்மனத்தைத் குழைக்கிறாள். சரி அவன்தானே (தயங்கலாய்) இருந்தான்.

காதரைன்-இருந்தானு! என்ன!

ஸார்ஜண்ட்:-போகிறது. இருக்கிறான், பத்திரமாய். இப்போதே என்மனத்தில் வருகிறது.

காதரைன்:-வருகிறதா, பொறும் சற்று இரும், உம்முடைய முகத்தை நான் சற்று உற்றுப்பார்க்கவேண்டும். எங்கே உமக்குத்தெரிந்தவெல்லாவற்றையும் உள்ளதைக் களங்கமின்றித் தயை செய்து சொல்லிவிடும்.

ஸார்ஜண்ட்:-எனக்கு ஒன்றும் நிச்சயமாய்த் தெரியவராது. குடியானவர்கள் தோல்விகளுடன் திரும்பும்போது அவர்களிடமிருந்து நீ யாவும் அறியலாம். போ. என் வீரர்கள் வெகுதூரத்திற் கப்புறம்போய்விட்டார்கள். என்னை ஹிம்சிக்காதே நான் போய்வருகிறேன்.

(காதரைன் தொடர ஸார்ஜண்ட் போகின்றான்.)

காதரைன்:-(ஓடிக்கொண்டே) ஐயா மிஸ்டர் ஸார்ஜண்ட் 5 நிமிஷங்கூட அதிகஞ் செல்லாது. இன்னும் ஒரே வார்த்தைதான்.

(வரும்)

விவேகாநந்தம்.

சூடாலை.

(358-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

பிராணாயாமஞ் செய்யும்போது, எத்தனைமாத்திரையால் பூரகஞ் செய்யப்படுகின்றதோ அம்மாத்திரையினும் நான்கு மடங்கு மாத்திரையால் கும்பகஞ்செய்யவேண்டும்; பூரகத்தின் மாத்திரையினும் இருமடங்குமாத்திரையால் ரேசகஞ்செய்தல்வேண்டும். நித்திரைசெய்பவனுடைய ஒருசுவாஸம் போய்த் திரும்புங்காலவளவு இங்குமாத்திரையாம்; அல்லது ஒருபிரணவத்தை யுச்சரிக்குங்காலவளவு மாத்திரையாம்.

காலை, நடுப்பகல், மாலை, நள்ளிரவு என்னு மிந்நான்குகாலங்களினும் பிராணாயாமத்தை மிகுதியாகச்செய்தல்வேண்டும். "உயிர்த்தகைக்கே பெருக வுடைத்தாம் யோகப்பேர்" என்று பெரியார் கூறியிருக்கின்றனர். உயிர்த்தகையென்னும் பிராணாயாமமேயோகபதத்தால் சிறப்பாகச் சொல்லப்படுகின்றது. இது கைவரப் பெற்றவர்க்குச் சர்வசித்திகளும் மிகுவெளிதாகச் சித்திப்பனவாம். பிராணாயாமஞ் செய்யும்போது வயிறுநிரப்பவுண்ணுதல் கூடாது; உண்ணுமுணவை நாற்பாகமாக்கி, அவற்றுள் இரண்டுபாகமுண்டு, ஒருபாக வளவாக நீருண்ணல் வேண்டும்; ஒருபாகவளவு வெற்றிடமுடையதாக வயிறிருத்தல்வேண்டும். பிராணாயாமம் செய்யும் போதுண்டாகும் வியர்வை நடுக்கமுதலியவற்றை வைராக்கியத்

தாலும் அப்பியாசத்தாலும் கெடுக்கவேண்டும். தேகமெலிவு, முகமலர்ச்சி, நேத்திரத் தெளிவு, நோயின்மை முதலியன வுண்டாகுமாயின், பிராணாயாமம் கைவசப்பட்டு வருகின்றதென்றுணர்தல் வேண்டும். பதங்கெட்டவுணவு, புணர்ச்சி, பிரயாணஞ் செய்தல் முதலியவற்றைக் கட்டாயமாக விட்டாற்றான் பிராணாயாமஞ் சித்தியாம்.

5. பிரத்தியாகாரம்:—சப்த பரிச முதலிய விஷயங்களிற் செல்லவொட்டாது சர்வ இந்திரியங்களையும் தடுப்பதாம். அஃதாவது விஷயங்களிற் சஞ்சரிக்கும் இந்திரியங்களைத் திருப்புதலாம்.

பிராணாயாமத்தால் பிராணவாயுவும், பிரத்தியாகாரத்தால் இந்திரியங்களும் வசப்படுவனவாம். பிராணவாயுவும் இந்திரியங்களும் வசப்படுவது பெரும் புண்ணியத்தின் பயனாம். இவ்விரண்டுமுடையவனது மனம் அவன்சொன்னவாறு நடப்பதாம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரமென்னு மிவ்வைந்தும் அடயோகத்தின் பகிரங்க சாதனங்களாம்; தாரணை, தியானம், சமாதியென்னு மூன்றும் அதன் அந்தரங்க சாதனங்களாம். பகிரங்கம் - வெளி; அந்தரங்கம் - உள்.

6. தாரணை—ஆத்மாவின்கண் மனம் இந்திரியவழிச் செல்லாது நிலைத்தலாம்; அல்லது† மூலாதாரம், மணிபூரகம், சுவாதிஷ்டானம், அநாகதம், ஆக்ஞை, விசுத்தி என்னும் சட்சக்கரத்தினுள் யாதாவதொருசக்கரத்தில் சித்தத்தைப் பதியவைத்தலாம்.

7. தியானம்:—தாரணைசெய்துள்ள விஷயத்தில் சித்தவிருத்தி ஒருமுகப்பட்டிருத்தலாம்.

8. சமாதி:—தியானிக்கின்றவன் தியானமென்னு மிரண்டுமின்றி, அநிலம் (காற்று) சேரா விளக்குப் போலத் தியானிக்கப்படும் பொருளொன்றையே சித்தம் சிந்தித்திருத்தல்; அல்லது தியானிக்கப்படும் வஸ்துமாத்திரமாய் விளங்குதலாம்.

சமாதிசெய்யும்போ தூண்டாகும் தூக்கம் சோம்பல் முதலிய தடைகளைப் பிரயத்தன பூர்வகமாகத் தடுத்தல்வேண்டும்; அவற்றைத் தடுப்பதுபற்றி அஜாக்கிரதையாக விருந்தால் சமாதி சித்திப்பதேயில்லையாம்.

---

† இவற்றினியல்பை ஹடயோகப்ரதீபிகை 117 வது பக்கத்திற் காண்க.

இவ்வித யோகத்தைத் தவறின்றிச் செய்பவர்க்கு அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்னும் அஷ்ட ஐசுவரியமும் தவறாது சித்திக்கும். அவற்றால் பராமுகப்பட்டுப் பாழானவர்பலர். சூடாலையே! நீ சிறந்தகுணவதியாக விருப்பதுபற்றி யிவ்வாறு வற்புறுத்திக் கூறுகின்றேன். தத்துவவிசாரஞ் செய்து சகலசந்தேகமும் நீங்கிய உனக்கு யான் இது பற்றிக் கூறுவதநாவசியகமாயினும், சொல்லவேண்டிய முறைமைப்படி சொல்லுகின்றேன்.

பிரபோத சந்திரோதயம்.

"எப்பிணியு மகன்றிடுமெவ் வினையுமறுஞ் சித்தியெல்லா மெய்து மோங்கு, முப்புவனத் தினும்பெறுதற் கரியபொருளொன்றுமிலை முடிக்க வேண்டில், அப்பிரமா தியர்செயலு மரைக் கணத்தின் முடித்திடலா மாதலாலே, யொப்பரிய யோகமதமிது போலப் பிறிதொர்மத முண்டோ வென்றான்"

என்றுள்ள செய்யுளும்,

தத்துவராயர்.

"வானிலே பறக்க மண்ணிலே நுழைய வானவர் வணங்கமற் றொருவர், ஊனிலே நுழைய வவரவர் தங்க ளுளந்தனி னினைந்தவை யுரைக்கப், போனதோ ருயிரை யெழுப்பவென் சித்தி புகன்றிதெல் லாங்கையில் வரினும், ஞானமே யில்லை யாயினங் கவரை நாயினுங் கடையென நாடே" என்றுள்ள செய்யுளையும்நீ அடிக்கடி சிந்தித்துவருதல் இன்றியமையாததாம். பதுமாவதியின் பொருட்டு இவ்வளவு தூரம் நான் வற்புறுத்திக் கூறினேன். அணிமாமுதலிய சித்தி யுனக் கிப்போது அவசியமாக வேண்டி யிருப்பதுபற்றி ஹடயோகத்தைச் சுருங்கச்சொல்லலும் விளங்க வைத்தலுமாகக் கூறினேன். இவ்விஷயத்தில் மிகுவிழிப்பாக விருத்தல் வேண்டும்.

சூடாலை:—தேவ தேவ! இப்போது தாம் கூறியவற்றுள் எனக் கியாதொரையப்பாடு மின்று; தமதுபதேசத்தால் ஹடயோகாப்பியாசத்தில் எனக்கிருந்த ஐயப்பாடெல்லா மொழிந்தன. ஹடயோகம் மனோலய சாதனமாவதன்றி மோட்ச சாதனமாவதன்றென்பது தமியேனுக்கு முன்னரே தெரியும். அது பற்றித் தாங்கள், பலமுறை வற்புறுத்திக் கூறிய விஷயம்

என்மனத்தை விட்டு நீங்கவில்லை. இனி ராஜயோகத்தினை யனுக்கிரகஞ் செய்யுமாறு பிரார்த்திக்கின்றேன்.

சுப்பய்ய சுவாமி:—(சிரக்கம்பஞ் செய்து) பெண்களுள்ளே இவ்வளவு பெருமை வாய்ந்த பெண்மணியிருப்பது பேராச்சரியமே! என்ன பொறுமை, என்ன அடக்கம், என்னகுணம்! மகா ஆச்சரியம். "சோளாள னென்பான் மறவாதான்" என்பது இவ்வம்மையாரிடத்தே குடிகொண் டிருக்கின்றது. (வெளிப்படையாய்) பொற்பாற் சிறக்கும் புண்யவதி! ராஜயோகத்தினைக் கூறுகின்றேன்; அதனை மிருகவனமாய்க் கேட்டல் வேண்டும்; உண்மையாய ராஜயோகிக்குப் பிறவி வருவதில்லவே இல்லையாம். பிறப்பெனும் பிணிக்குப் பெருமருந்தாய ராஜயோகத்தின் பதினைந்தங்கத்தினையும் பதுமாவதி! நீ சித்தத்திற் செவ்வையாகப்பதியவைத்துக்கொள்.

பதுமாவதி:—அடிமைக்கிரங்கி யருள்புரியத் திருவுளங்கொண்ட ஆண்டவரே! அப்படியே செய்கிறேன்.

ராஜயோக அங்கம்.

சுப்:— (1) இயமம், (2) நியமம், (3) தியானம், (4) மௌனம், (5) தேசம், (6) காலம், (7) ஆசனம், (8) மூலபந்தம், (9) தேகசமத்துவம், (10) பார்வைநிலை, (11) பிராணாயாமம், (12) பிரத்தியாகாரம், (13) தாரணை, (14) ஆத்மத்தியானம், (15) சமாதியென்பன ராஜயோகத்தின் அங்கங்களாம்.

1. இயமம்:—எல்லாம் சிவசொரூபம் என்னும் ஞானத்தால் இந்திரியக் கூட்டங்களை யடக்குதலாம்.

2. நியமம்:—சித்தம் சிவாகாரவிருத்தியின் பெருக்கமும் உலகாகாரவிருத்தியின் நீக்கமு மாதலாம்.

3. தியானம்:—எல்லாம் சிவசொரூப மென்னும் அப்பியாசத்தால் உலகாபிமானத்தை விடுவதாம்.

4. மௌனம்: — எதனினின்றும் வாக்கு மனமோடு அடையாது திரும்புகின்றதோ, எது மௌனயோகிகளடைவதற் குரியதோ, அஃதாக விளங்கியிருப்பதாம்.

5. தேசம்:—தொடக்கத்திலும் முடிவிலும் நடுவிலும் எதில் ஜனங்கள் வசிப்பதில்லையோ எதனால் உலகமெப்போதும் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ அதுவாம்; அதுவே நிர்ஜனப் பிரதேசமாம்.

(அந்த நிர்ஜனப் பிரதேசமே பரமகதியாம்.)

6. காலம்:—சிவம் பிரஹ்மா முதலாயினோது நிமிஷமுதல் சர்வ பூதங்களின் உற்பத்தி ஸ்திதி லயங்களுக்கு ஆகாரமாயிருத்தலால், அதுவே காலமாம். (அந்தக்காலத்தில் வசிப்பதே மேன்மையைத் தருவதாம்.)

7. ஆசனம்:—எதனிடத்து இடைவிடாது பிரஹ்ம சிந்தனம் சுகமாக வுண்டாகுமோ அதுவாம்.

8. மூலபந்தம்:—எது சர்வ பூதங்கட்கும் காரணமோ சித்தத்தின் பந்தனம் எதற்குக்காரணமோ அதுவாம்.

9. தேகசமத்துவம்:—அங்கங்களின் (சிவத்திற் கற்பிதமாய சுபாவ விஷயங்களாய அங்கங்களின்) சமத்தன்மையை யறிந்து விகற்பமின்றி யிருப்பதாம்.

10. பார்வைநிலை:—பார்வையை (மனோவிருத்தியை) ஞானமாகச் செய்து, உலகத்தைச் சிவமயமாகக் காண்பதாம்.

11. பிராணுபாமம்:—சர்வ மனோவிருத்திகளையும் சர்வஞ் சிவமெனப் பார்ப்பதனுல் தடுப்பதாம்.

1. உலகைப்பொய்யெனத் தள்ளுதல் இரேசகமாம்.
2. யான் சிவவடிவமென்னும் பாவனை பூரகமாம்.
3. அப்பாவனை யுறுதிப்பட் டிருத்தல்-கும்பகமாம்.

12. பிரத்தியாகாரம்:—விஷயங்களில் சித்தின்தன்மையையறிந்து, மனம் சித்தின்கணமூழ்ந்து யிருப்பதாம்.

13 தாரணை:—மனம் சென்ற விடமெல்லாவற்றையும் சிவமாகக் கண்டு, அதன்கண் மனத்தை நிறுத்துதலாம்.

14. ஆத்மத் தியானம்:—ஆத்மாவேசிவம்; சிவமேஆத்மா என்னும் பாவனை செய்வதால், தேகமுதலியவற்றின் எண்ணமில்லாதிருப்பதாம்.

15. சமாதி:—நன்று, தீது, நான், தான், அன்று, ஆம் என்றற்றொடக்கத்து விகற்பமகன்று, பிரபஞ்ச சம்ஸ்கார மின்றிச் சிவமாகவே விளங்குவதாம்.

இந்தஞானயோகம் செய்யும்போது அநுசந்தானமின்மை, சோம்பல், போகவிச்சை, நித்திரை, காரியாகாரிய அவிவேகம், விஷயந்தோன்றுதல் முதலிய தடைக ளுண்டாகும் அவற்றை விழிப்பாகக் கெடுத்து வருவாயாயின், தானறிவாநந்த மாகவே விளங்குவாய் சூடாலை!

சூடா:—(நமஸ்கரித்து) யான் இன்றுதான் பிறப்பின் பயனைப் பெற்றேனென்று நினைக்கின்றேன்; ஒன்றும் விரும்பாது உலகாகாரந் தவிர்ந்துள்ள தங்கட்கு யான் யாது கைம்மாறு செய்யப் போகின்றேன்; தமியேன் மீது சுவாமிகளின் கருணை பூரணமாகவிருக்கவேண்டும்.

சுப்:—நான் கூறியவாறொழுகுவதே எனக்குக் கைம்மாறாகும்; உடம்பினையே பெருஞ்சுமையாக நினைக்கு மெனக்கு யாது வேண்டும்? ஒன்றுமில்லை.

சீதரன்:—(வந்து ஓரொதுக்குப்புறமாக நின்று பத்மாவதியைநோக்கி) மகாராஜா வருகின்றார்.

பத்மாவதி:-(சூடாலையை நோக்கி) பெண்மைக்குண மெலாம் பிறங்கிடு நங்காய்! மகாராஜா வருகின்றார்.

சூடா:—மகாராஜாவா வருகிறார்; அவர் வருவது இப்போதவசியமே.

(சிகித்துவசன்வந்து சுப்பய்யசுவாமிகளை நமஸ்கரித்து அவர் ஆசிபெற்றுட்கார்ந்தான்; சூடாலை யெழுந்து பணிவாக ஒருபுறத்து நின்றாள்; பதுமாவதி சற்று விலகியிருந்தாள்.)

சிகித்துவசன்:—(சுப்பய்ய சுவாமிகளை நோக்கி) சுவாமிகள் விஜயஞ் செய்து வெகுநாளாயிற்று, காசியிலிருந் தெப்போது வந்தீர்கள்?

சுப்:—இப்போது தான் வந்தேன்; சூடாலைக்கு யோகபாவனையைப்பற்றிச் சிறிதுபதேசித்தேன்; அதன்முடிவில் தாங்கள் வந்தீர்கள்.

சிகி:—யோகபாவனை செய்வது மிகு பிரயாசமான செயலன்றோ? அஃதெங்ஙனம் சூடாலைக்குச் சித்தியாம்?

சுப்:—குருவினிடத்தும் சாஸ்திரங்களிடத்தும் பூரண விசுவாசமுடையவர் யாவராயிருப்பினும் அவர்க்கு யோகபாவனையேயன்றித் தத்துவ ஞானமும் எளிதிற் சித்தியாம். அதுபற்றி ஐயுறல் வேண்டாம்.

சிகி:—சுவாமிகள் தமியேனுக்கு மனம்வசப்பட்டுத் தத்துவ ஞானமுண்டாகும் மார்க்கத்தை யுபதேசித் தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

சுப்:—கரபாத்திரசிவப்பிரகாச சுவாமிகள் தங்களுக்குபதேசித்துள்ள தத்துவமசியென்னும் மகாவாக்கியார்த்தத்தைச் சிந்தித்து, அவர்க ளருளியவா றொழுகுவீராயின் அது சித்தியாம்; நான் தங்கட் கிப்போது அதுபற்றிக் கூறவேண்டுவதொன்று மில்லை.

சிகி:—அவ்வாறே செய்கின்றேன்.

சுப்:—நான் ஆநந்தாசிரமத்திற்குப் போகவேண்டியவனாகவிருக்கின்றேன், போகலாமென்று நினைக்கிறேன்.

சிகி:—அவ்வாறே செய்யலாம்

(எல்லாரும் போகின்றார்கள்.)

இரண்டாவது அங்கம்
முற்றுப் பெற்றது.

பிராணி சாஸ்திரம்.

(336 வது பக்கத்தின் தொடர்ச்சி.)

சாகபக்ஷிணி(C) தடித்த தோலுள்ள ஜெந்துக்கள்.

2. கால்களில் மூன்று அல்லது நான்குவிரல்களையுடைய யானையினம்.

காண்டா மிருகம்.

காண்டாமிருக மென்பது பார்வைக்கு யானையைப்போலவே யிருக்கும்; ஆனால் யானையைப்போல இதற்கு நீண்ட தும்பிக்கையில்லை. மிருகஜாதியில் யானைக்கு அடுத்த பலமுள்ள ஜெந்து; 10 அல்லது 12 அடி நீளமும் 7 அல்லது 8 அடி உயரமுமுள்ளது. இஃது ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்களில் அதிக உஷ்ணப்பிரதேசங்களில் வசிக்கின்றது. இதன் தடித்த தேகமும் பருத்த தலையும் குறுகிய கழுத்தும் கால்களும் பார்வைக்கு அருவருப்பா யிருக்கும். இதன் மேலுதடு சற்று நீண்டு வளையத்தக்கதா யிருக்கும். இதன் மூக்கின்மேலுள்ள கெட்டியான தடித்த கொம்பு இச்செந்துவின் சிறந்த அவயவமாயிருக்கின்றது. இக்கொம்பை இச்செந்துவின் தற்காப்புக்காகவே கடவுள் உண்டாக்கி யிருக்கவேண்டுமென் றூகிக்கத்தகும். இதன் தற்காப்பிற்காகக் கொம்புமாத்திரமேயன்றி இதன்தோலும் மிகத்தடிப்பாய் அமைக்கப்பட் டிருக்கிறது. சிங்கம் புலி முதலிய மாமிசப்பட்சணிகளின் நகங்களால் கிழிக்கப்படாததும் கத்தியால் வெட்டப்படாததும் துப்பாக்கியால் சுடப்படாததுமான அவ்வளவு கெட்டியான தோல் இதற்குண்டு. இதன்கழுத்திலும், புஜத்திலிருந்து முன்முழங்கால்கள் வரையிலும் முதுகின் பின்புறத்திலிருந்து பின்னங்கால் தொடைகள் வரையிலும் தோல்மடிப்புகள் உண்டு. இது சதுப்பு நிலங்களில் வாசஞ்செய்யும். வேர்கள் கிழங்குகள் முதலியன இதற்கு முக்கிய ஆகாரமாம்.

வகைகள்:—ஒற்றைக் கொம்புள்ளன, இரட்டைக்கொம்புள்ளன; இரட்டைக்கொம்புள்ளன ஆப்பிரிக்காக்கண்டத்தி லிருக்கின்றன.

யானை.

எல்லா மிருகங்களிலும் அதிகப்பெரியது யானை. இது அதிக உயரமும் பலமுமுடையது. சிலயானைகள் பதினோரடி உயரமுமிருக்கும்; சாதாரணமாய் எட்டு அல்லது ஒன்பது அடி உயரம் யானைகள் வளரும். எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் இதற்குமாத்திரம் சிறப்பாக விருக்கும் அவயவம் துதிக்கையாம்.

தேக அமைப்பு:—பருத்த தேகத்தையும் தலையையும் தாங்குவதற்குக் கால்களும் கழுத்தும் குட்டையாயும் பருத்தும் இருக்கின்றன. இதன் கழுத்துக் குட்டையாயிருப்பதனால் மாடு குதிரை முதலியவைகளைப் போல் தரையிலுள்ள புல்லை மேய்வது இதற்கு அசாத்தியம்; ஆனால் இதற்கோ தழைகள் பூண்டுகள் முதலிய சாகபதார்த்தங்களே ஆகாரமா யிருக்கின்றன.

ஆதலால் தரையின்பேரில் முளைத்திருக்கும் புல்பூண்டுகளையும் மரங்களிலுள்ள தழைகளையும் மேய்வதற்கு நீண்ட அவயவம் ஒன்று அத்தியாவசியகமாக வேண்டி யிருக்கிறது. இவ்வவயவம் தான் துதிக்கை. நமக்கு கைகள் எப்படி உதவுகின்றனவோ அப்படியே யானைகளுக்குத் துதிக்கை உபயோகப்படுகின்றன. இத்துதிக்கை பல எலும்பு வளையங்களாலாக்கப் பட்டு எப்பக்கமும் சுலபமாய் வளைக்கத் தக்கதா யிருக்கின்றது. இது போலா யிருக்கிறது. இதன் நுனியி லிரண்டு துவாரங்கள் உண்டு. இதன் மூலமாய்த்தான் இது சுவாசிக்கிறது. யானை ஜலம் குடிக்க வேண்டுமானால் முதலில் ஜலத்தை உறிந்து துதிக்கையில் நிரப்பிவைத்துக்கொண்டு பிறகு ஜலத்தை வாயில் கொட்டிக்கொள்ளும்.

தந்தங்கள்-பற்கள்:—சாதாரணமாய் யானைகளுக்கு மேல்வாயிலிருந்து இரண்டு பற்கள் நீண்டுவளைந்து இருக்கின்றன. இவற்றைத் தான் நாம் தந்தமென்று சொல்லுகிறோம். ஆண் யானைகளுக்குத் தந்தங்கள் நீளமாயும் பெண் யானைகளுக்குக் குட்டையாயு மிருக்கின்றன. இத்தந்தங்கள் யானைக்குத் தன் ஆகாரத்தை மெல்லுவதில் சற்றேனும் உபயோகப்படுவதில்லை; ஆனால், இவை தம் சத்துருக்களைக் குத்திக்கொல்ல உதவுகின்றன. ஆகாரத்தை மென்று தின்னுவதற்குக் கடைவாய்ப் பற்க ளிருக்கின்றன. இப்பற்கள் எந்திரக்கற்களைப்போல் ஆகாரத்தை அரைக்குஞ் சக்தியுடையவை; யானைக்கு அரைக்கும்பற்க ளிருப்பதால் தான் அதற்குச்சாகபதார்த்தங்களே ஆகாரமா யிருக்கின்றன; வெட்டும் பற்களும் கோரைப்பற்களும் கிடையா. யானைக்கு மொத்தத்தில் 12 கடைவாய்ப்பற்கள் உண்டு.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுவரன் பேட்டை.

மௌனத்தின் வலிமை.

(The Power of silence.)

மௌனம் சப்தத்தைவிட நன்றாய் மனதில் ஊன்றும் வலிமையுள்ளது. இதை ப்ரவிர்த்தி மார்க்கத்தில்நிதர்சனமாய்ப்பார்க்கலாம். நிவிர்த்திமார்க்கத்தில் இதன் வலிமையைப்பற்றிச் சொல்லவேவேண்டியதில்லை. காடு, பாலைவனம், ஏரி, மலைச்சிகரம் என்னுமிவற்றின்கணுள்ள மௌனத்தின் (நிச்சப்தத்தின்) மகிமையும், நம்மனத்தை ஏகாக்கிரப்படுத்துவதில் இதற்குள்ள அபாரசக்தியும் சந்தையிரைச்சலுக்கு நிகரான பட்டணங்களின் நடுவில் இல்லையென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

ஆத்மலாபத்தை யடையவேண்டுமென்ற ஊக்கம் எள்ளளவுமில்லாத ஆன்மாக்கள் சப்தத்தையே விரும்பி அதன் வசியத்துக் குள்ளாகின்றார்கள் என்பது நிஜமே; ஆனால், " தன்னைத்தானறிய" விரும்புவோன் ஏகாந்தத்தையே விரும்புகிறான். அகத்தில் மௌனம் சித்திபெற விரும்பினவர் யாவரும் புறத்தில் சப்தமில்லாத இடங்களையே எப்பொழுதும் தேடுகிறார்கள். உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரையில் அவதரித்துள்ள மகாபுருஷர்களுடைய திவ்விய சரித்திரங்களைக் கவனிக்க இதன் உண்மை நன்குவிளங்கும்.

ஒருவழிப்படாத அசுத்தமான மனதையுடைய சிலரோ தங்களுடைய மனோநிலைமையை ஆராயப் பயப் படுகிறார்கள்; ஆகையால், இவர்கள் தங்கள் மனோ மௌனம் தங்களுக்குச் சற்றும் புலப்படாமலிருக்கக்கூடிய உலக ஸுகங்களாகிய சிற்றின்பஇரைச்சலையேதேடி யலைகின்றார்கள். கட்டுப்பட்ட தூய மனமுள்ளவர்களோவெனின் தாங்கள் தங்களுடைய மனத்தை எதிரெதிராய்ப் பார்த்துப் பக்குவப்படுத்தி அதை ஞானத்துக்கு அடிமையாக்கித் தியானத்தில் நிலைநிறுத்துகிறார்கள். அவர்கள் ஏன் ஏகாந்த ஸ்தலத்தையே விரும்புகிறார்கள் என்றால், பஞ்சேந்திரியங்களுடைய கூக்குரலையடக்க ஏகாந்தத்தைவிட உயர்வான கருவி வேறொன்றுமில்லை.

ஏகாந்தமான இடத்தில்தியானத்தில்எத்துணைக்கெத்துணை ஒரு மனிதனுக்குமனம்நிலைநிற்கிறதோ அத்துணைக்கத்துணைதான் இதுவரையில் உணராத ஒருசக்தி தன்னிடத்தி லிருப்பதாக அவன் உணருகின்றான். கடாகாசம் படாகாசம் என்று தர்க்கிக்கிறார்களே அவர்களுடைய சக்தி நாம் மேற்கூறிய சக்திக்குஅணுவளவும் நிகராகாது. அஃதென்னசக்திபெனின், பரோபகாரத்தில் தன்னை மறக்கும் சக்தி (Selflessness) மெய்யறிவின்சக்தி. அந்தச்சக்தி அன்பிலிருந்து முளைத்து ஞானத்தோடு கலந்து விளங்குகின்றது.

விவேகியானவன்தன் சத்துருக்களிடத்தும் அனுதாபம் பாராட்டுகின்றான். அவர்கள் தன்னை வைது திட்டினாலும் இவன் மந்தகாஸத்தோடு மௌனமாயிருக்கிறான்; ஏனெனின், அவரவர்களுடைய குணத்துக்குத் தகுந்த நடவடிக்கை அவரவர்களிடத்தில் இருப்பது ஞானிக்கு ஒரு ஆச்சரியமாகத் தோன்றாது. பாகற்காயில் எப்படி இனிப்பைக்காண முடியாதோ அப்படியே அவிவேகியிடத்தில் சாந்தகுணம் இராதென்பது விவேகிக்கு நன்றாய்த்தெரியும்.

வால்ட் விட்மன்(Walt Whitman)என்னும் கீர்த்திபெற்றஆங்கிலமகாகவி தாம் எழுதிய செய்யுள்களை இகழ்ந்துபேசினசிலரைப் பற்றி "அவர்களுடைய சுபாவத்துக்கு அதுதான் ஸரி" என்று சொன்னதாக நாம் கேட்டிருக்கின்றோம். ஞானியானவன் தான் கொண்ட கருத்துத்தான் ஸரி என்று எல்லோரும் ஒப்புக்கொள்வதற்காக உலகத்தோடு சண்டை போடமாட்டான்; ஆனால், இதராருடைய மனோநிலைமையைப் பார்த்து இரக்கப்படுவான். இதனால் அவன் மனச்சாந்திக்கு ஒருபோதும் குறைவு நேரிடுகிறதில்லை. உலகத்தோடு விரோதமும், அதனால் விளையும் துக்கமும் அவனுக்கில்லை. தன்சத்துருவைச் சண்டையினா லல்லாது அன்பினால் ஜயித்துவிடுகிறான். தன்னையாராவது உபத்திரவப்படுத்தும் போதும், பரிகஸிக்கும்போதும் திட்டும்போதும் அவன்முகத்தில் விளங்கும் தேஜஸினால் இவன்மௌனத்தின் வலிமை துலங்கும்.

"மார்க்கத்திலிருக்கும்போதே உன்சத்துருவோடு ஸிநேகம் செய்து கொள்" என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருப்பது இந்தச் சக்தியைக் குறித்துத் தான். வாக்குவாதம், சண்டை, மனஸ்தாபம் இவைகளை உண்டுபண்ணும் ஸுபாவ முள்ளவன் தன்சத்துருக்களோடு மாத்திரமல்ல ஸிநேகிதர்களோடும் விரோதம்செய்து

கொள்ளுகிறான். கத்தியைவிடக் கூரான அவன் நாக்கானது சத்துருக்களுடைய விரோதத்தைப் பலப்படுத்துவதோடு ஸிநேகிதர்களையும் சத்துருக்களாய்ச்செய்து விடுகிறது. விவேகியோவென்றால் தன் அன்போடுகூடிய மௌனத்தால் ஸிநேகிதர்களின்வாத்ஸல்யத்தைப் பலப்படுத்து கிறதோடு விரோதிகளையும் ஸிநேகிதர்களாக்கிக்கொள்ளுகிறான்.

சினதேசத்தில் அவதரித்த கன்ப்யூஷியஸ் (Confusious)என்னும் மகானிடத்தில் மேற்சொன்ன சக்தி அபாரமாயிருந்ததால் அவருடைய சிஷ்யர்களில் ஒருவராவது அவரைவிட்டு நீங்கினதேயில்லையென்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அதேமாதிரி தாறுமாறாய்ப் பிதற்றிக்கொண்டு தமக்குத் தீங்கு செய்யவேண்டுமென்ற கருத்தோடு தம்மை அணுகி வந்த பரம சத்துருக்களையும் அவர்களுடைய தாறுமாறான கேள்விகளுக்கு ஒரு உத்தரமும் சொல்லாமல் மௌனத்தோடிருந்து அவர்களைத் தம்முடைய அன்பான சிஷ்யர்களாகப் புத்த பகவான் செய்ததுண்டு. இயேசு கிறிஸ்துவைப் பரிகசித்தும் நிந்தித்தும் சிலுவையில் அறையக் கொண்டுபோன காலத்து அவர் மௌனத்தோடிருந்தது உலகத்தில் இன்றைக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. ஞானத்தினிடத்திலிருந்து பிறக்கும் வார்த்தைகளுக்குப் பலமுண்டு. ஆனால் அறிவும் அன்பும் கலந்த மௌனத்தின் சக்தி மனவாக்குக்கெட்டாதது. "Speech is silver and Silence is golden" என்று ஆங்கில பழமொழி ஒன்றுண்டு. அஃதாவது வார்த்தை வெள்ளிக்குச் சமமாயின், மௌனம் தங்கத்துக்கு நிகரானது.

தற்காலத்திலோ எங்கே பார்த்தாலும் சந்தடியும், போட்டியும், மதபேதங்களும், சச்சரவுமே வியாபித்திருக்கின்றன. நமது வாழ்நாள் ஸமாதானமாய் விவேகத்தோடு நடக்கவேண்டுமானால் நாம் இதற்கு மாற்றுத் தேடவேண்டும். மௌனமும், சாந்தமும் தாம் இதற்குமாற்று. சுறுசுறுப்பும் உழைப்பும் எப்படி இகலோகஸாதனங்களோ அப்படி நமது சாஸ்வத வீடாகிய பரலோகத்துக்கு வேண்டிய ஸாதனங்கள் மௌனமும், சாந்தமும் தாம். ஏகாந்தத்தில் (Solitude) தான் இப்பொருள்கள் விளையுமேயொழியச் சந்தையில்விளையா. இதற்காக நாடு நகரம் மனைவாழ்க்கையெல்லாம் துறந்து காட்டிலிருந்து தவம் செய்யு வேண்டுமென்ப

தல்ல எமது கருத்து. உலகத்திலுள்ள மண் பெண் பொன் முத லிய பொருள்கள் நமது ஐம்பொறிகள் வழியாய் நம்மனத்தை இழுக்கச் சக்தி யற்றவைகளாகச் செய்ய வேண்டுமானல் ஏதோ பிரதி தினமும் குறித்த நேரத்தில் நம் ஐம்பொறி வாயிலைச் சாத் தி நம் மனத்துக்குட் சென்று கண்ணுடியால் மூடப்பட்ட விளக் கின் ஜ்வாலை அசையாம லிருப்பது போல நம்முடைய ஆத்மாவும் சலன மில்லாமல் மௌனத்தில் லயமாயிருக்க வேண்டியது அத்தி யாவசியகமாம்.

வாயோயாமல் பேசிப்பேரிரைச்சல் உண்டு பண்ணுவதும்சண் டை போடுவதும் எவர்க்கும் எளியவாம். எந்த அடிமையும் முன் னதைச் செய்வான். பின்னதை எந்தத் துஷ்ட மிருகமும் செய்யும். இவை பலத்தின் அறிகுறியல்ல. பிரமாதம் வந்த காலத்தும் அசையாமல் இருத்தலும் ஸகிக்க முடியாத கோபத்தை அடக்கி மௌனத்தோ டிருப்பதுமே வீரியத்தின் அறிகுறிகள். இப்பேர்ப் பட்ட மௌனமும் சாந்தமுமுடையவன் தனக்கு ஒரு வலிமையி ருப்பதைத்தான் உணர்வதோடு அவனது தரிசனுனுக்கிரகத்தால் பெரும்பாக்கியமுள்ளவர்களுக்கும் அந்த வலிமைபிராப்தமாகிறது. ஒரு விளக்கினின்று அதன் கிரணங்கள் எப்படி அதன் உணர்ச்சி யில்லாமலே நாலாபக்கத்திலும்உள்ள இருளைப்போக்குகின்றனவோ அப்படி பூர்ண நிலைமை யடைந்த ஸாதுக்களுடைய மௌன த்தி லிருந்து நாலா பக்கத்திலும் வீசும் சக்தி எல்லோருக்கும் துக்கத்தைப் போக்கி மனத்திற்குச் சமாதானத்தைக்கொடுக்கின் றது.

நல்ல வார்த்தைகள் செவிகளின் வழியாய் மனிதனுடைய மனத்தை எட்டி ஞானமாகிய சுடரை ஏற்றி வைக்கின்றன; ஆனால் அன்பும் ஞானமும் கூடிப் பிறந்த மௌனமோ மோக்ஷத்திலுள்ள பரமபதத்தின் (Heavenly Peace) ருசி இப்படி யிருக்கும் என்று முன்னரறிவிக்கிறது. (Gives a foretaste of the HeavenlyPeace)

K. Rangaswamy Aiyangar.

கைகள்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல உறுப்புக்களிலும் மனிதனுக்கு அதிகமாக உபயோகப்படக்கூடிய அவயவம் கை என்பது நம்நேயர் அனைவரும் அறிவார். இஃது மற்றெல்லா அவயவங்களை விட மஹா முக்கியமானது. எப்படியெனின், மற்ற அவயவங்கள் கையைப்போல் சுறுசுறுப்புள்ளவை யல்ல. கண், செவி, நாசி இவைகளைப்பற்றிச் சற்று யோசிப்போம்:—மேற்கூறிய அவயவங்கள் எப்போதும் திறந்தவண்ணமாய் அமைக்கப்பட் டிருக்கின்றன. கண்ணானது பார்க்கத் தக்கவைகளையும், மனதுக்கு அருவருப்பாயுள்ள பார்க்கத் தகாதவைகளையும் பார்க்கவும், காதோ கேட்கத்தகுந்ததையும் தகாததையும் கேட்கவும், மூக்கோ நல்லவாஸனையையும் கெட்ட வாஸனையையும் முகரவும் உரிமையுள்ளவைகளா யிருக்கின்றன. கை அப்படியல்ல. தான் எதைப்பரிசித்தால் நன்மையையும் சந்தோஷத்தையும் விளைவிக்குமோ அப்படிப்பட்டதையே யோசித்து ஸ்பரிசிக்கிறது. கை தனக்கு விருப்பமில்லாதவைகளைத் தவிர்த்து விருப்பமுள்ளவைகளைக் கொண்டு ஆநந்தம் அடையும் ஆற்றலை யுடையது; சுருங்கச்சொல்லின் தன்னைத்தான் அடக்கியாள ஒருவிதத்திறமை யுடையது; மற்ற அயவங்கள் அத்தன்மையுடையனவல்ல.

கையானது வேண்டியவைகளைக்கொண்டு திருப்தியடைந்து சுயநலம் பாராட்டாமல் மற்ற அவயவங்களுக்குத் தன்னாலியன்ற மட்டும் உதவி புரியச் சித்தமாயிருக்கிறது. மனிதனுக்கு ஏதாவதோர் அவயவயம் குறைந்திருந்தால் அதன் வேலையையும் செய்கிறது. அந்தகனுக்குக் கையானது கண்ணைப்போலவும், ஊமை, செவிடருக்கும் கை சமிக்ஞைகளையும், எழுத்துக்களையும் முறையேகொண்டு மற்றவர்களுடன் பேசுந்திறமையை யுடைத்தாயிருக்கிறதென்பது நாம் சொல்லாமலே நன்கு விளங்கும்.

கண்களுக்குச், சிறியவைகளைபெரியவடிவ முள்ளவைகளாகக் காட்டவும், அதிக தூரமிருப்பவைகளை அருகிலிருப்பதாகக் காட்டவும் மைக்ராஸ்கோப், டெல்லஸ்கோப் பென்னும் கண்ணாடிகளையும், செய்துகொடுத்திருக்கின்றது. காதுகளுக்கு மிகமெல்லிய

குரலும் கேட்பதற்கு இந்திய ரப்பரினாற் சிறு குழாய்கள் செய்து கொடுத்திருக்கிறது; மூக்குக்குச் சுகந்தபரிமள புஷ்பங்களைப்பறித்து இன்ப மடையும்படி தருகின்றது; "பூங்கை புகழவோ நாவிற் குதவு நயந்து" என்ற பெரியோர் வாக்கியத்திற் கிணங்க, ருசியுள்ள பதார்த்தங்களை நாவிற்குக்கொடுக்கின்றது. ஆகவே மற்றஎல்லா அவயவங்களுக்கும் பிரதியுபகாரத்தைக் கிஞ்சிற்றும் விரும்பாமலே உதவி செய்கிறது. இதனால் மற்ற அவயவங்கள் மனிதனுக்குப் பிரயோஜனமற்றவை யென்று நான் சொல்ல வரவில்லை.

இது தவிர கைக்குத் தைரியமும், வீரத்தன்மையும் யுக்தியும் பட்சமும் உண்டு:—எப்படியெனின், "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்றதுபோல் பட்டாகத்தி கொண்டு யுத்த களத்தில் சண்டை செய்து வெற்றி யடைகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் ரோமாபுரியின் கண்ணிகழ்ந்த சண்டையில் ஹொரேஷஸ் (Horatious)என்னும் வீரன் மற்ற இரண்டு வீரருடன் ஒருபட்டாகத்திகொண்டு90 ஆயிரங்கொண்ட பெருஞ்சேனை வெள்ளத்தைத் துரத்தியோட்டித் தன் ஸ்வதேசத்தைக் கொடிய எதிரிகளினின் றும் காப்பாற்றினது ஹொரேஷஸி னுடைய கையல்லவா? களஞ்சியங்களிலும் மண்டிகளிலும் நிறைந்திருக்கும் தானியங்களை நிலத்தை யுழுது எருவிட்டு நீரிறைத்து விளைவித்தது கையல்லவா? எண்ணாயிரம் பேர் கூடியசபையின்கண் விஞானத்தினால் ஆநந்தத்தையுண்டுபண்ணி அனைவரையும்பரவசமாக்குவ துவீணையின் மேல் விளையாடும் வித்வான்களின் கையல்லவா? ரவி வர்மா படங்கள், சிறந்த நாடக சீன்கள் முதலியவைகளைப் பார்க்குமிடத்தும் மனிதர்களின் ஆவியை ஆகர்ஷிப்பது வர்ணப் பென்சிலைக் கொண்ட சித்திரக் காரர்களின் கையல்லவா? சட்டசபையிலும், காங்கிரஸ் சபையிலும் நம் இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவரும் நிமித்தம் மசோதாக் கொண்டு மன்றுடுவதும் தீர்மானிப்பதும் சுதேசாபிமானிகளின் கையல்லவா?

இன்னும் அஃது எவ்வளவு அற்புதச் செயல்களைத் செய்திருக்கிறது. ஹிந்து யூனிவர்ஸிடி ஏற்படுத்தும் நிமித்தம் லக்ஷக்கணக்கான பணத்தை யளித்தது நம் சுதேசாபி மானிகளின் கையல்லவா? நீராவியந்திரத்தைக் கண்டு பிடித்ததும்அதனை உபயோகிப்பதும், அநேகமைல் களுக்கு அப்பா லுள்ளவர்களிடமிருந்து உட

னே சமாசாரம் தெரிந்துகொள்ளச் சாதகமாயிருக்கிற தந்தியைக் கண்டுபிடித்ததும், அதை உபயோகிப்பதும், யுத்தங்களில் வெற்றியடைவதற்குபயோகமான பீரங்கி, வெடிகுண்டு, கத்தி, கேடயம் போர்க்கப்பல் முதலியவைகளைச் செய்ததும், அவற்றை உபயோகிப்பதும், ஒரு பட்டணத்தி லிருந்து மற்றொரு பட்டணத்திற்குப் போக்குவரத்துக் குரிய இருப்புப் பாதையைக் கண்டுபிடித்ததும் அதைச் செலுத்துவதும், கோயில்கள், கொத்தளங்கள் கூட கோபுரம் மாட மாளிகைகளைக் கட்டுவதும், பிள்ளைகளின் படிப்பிற்காக வித்தியாசாலைகளையும், வியாதியஸ்தர்களுக்கு ஒளஷத சாலைகளையும், கட்சிக்காரர்களுக்கு நீதிஸ்தலங்களையும் பொதுவாகக் கிராம முதல் பட்டணமீறாகக் கட்டினது நமது கைகளல்லவா? டில்லி நகர்க்கருகாமையி லுள்ள காட்டை வெட்டிச் சீர்திருத்தித் தேவலோக சபையைப் போல் நமது காருண்ய சக்ரவர்த்தி முன் பிரகாசிக்கச் செய்தது நம் சகோதரர்களின் கையல்லவா? "உடுக்கை யிழந்த வன்கை போல்", "கைசென்று தாங்குங்கடிது" என்ற தமிழ் வித்வான்களின் முது மொழிப்படி உபகார சிந்தையுடையதும் கையல்லவா? கிணற்றில் விழுந்தவர்களை எடுத்துக்காப்பாற்றியதன் காரணமாக அதிகாரிகளினால் வெகுமானமாகக் கொடுக்கப்பெற்ற பொன்காப்புக்கொலுசுகளை அணிவது கையல்லவா? இந்தியாவின் நன்மையின்பொருட்டுச்சாஸ்திரக் கல்வி, தொழிற்கல்வி முதலியவைகளைக் கற்றுக் கொண்டு வருவதற்காக மாணவர்களை அந்நிய தேசங்களுக் கனுப்புவதற்கும் அவர்களின்செலவிற்கும்தீபாவளி தோறும் தனிகர்களிடம் போய் சகாயத்திற் காக கேட்பது நமதுகையல்லவா? அப்போது நமது தனவான்கள் தங்கள் கைகளைச் சரியாகஉபயோகிக்காம லிருப்பதினால் பிரதி வருஷமும்ஷியார்களை "கைகருணைக்கிழங்கு வாய் வாழைப்பழம்" என்று அவதூறு உலாவுகின்றது. அப்படி யிராமல் இப்போது தென் ஆப்பிரிக்காவில் கஷ்டப்படும் நமது சகோதரர்களுக்காக நம்மவர்களனைவரும் தங்கள் கைகளுக்கு அவதூறுவராமல், பெட்டியிலும் பேழையிலும் தங்கள் கைகளைத் தாராளமாக விட்டு (கர்ணனுக்கு மிஞ்சியகொடை) என்று சொல்லிக் கொண்டாடும்படி பொருளெடுத்துக் கொடுத்து உதவிசெய்வார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கருணாகரன்.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி).

ஏறக்குறைய இரண்டுமாசம் சென்றுவிட்டன; பூங்காவனம் சித்திரசாலையைப் பார்க்க விரும்பவில்லை. இதற்கிடையில் ஜமீன்தார் எப்பொழுதாவது குறித்த சித்திரசாலை விஷயமாகவும் தமதுசகோதரனதும் அவரின்குமாரனதும் கதைகளைக் கூறினால் அவள் அதை விடுத்துத் தோட்டத்தின் இன்னொருபகுதியைப் பார்க்கவில்லை முன்னர்ப்பார்த்த சிற்சேறிகையை இன்னும் ஒருமுறை பார்த்தல் வேண்டும் என்றற்றொடக்கத்தனவாகிய வேறு கதைகளைக் கூறி அவைகளை மறந்துவிடும்படி செய்துவிடுவாள். இவள் எதற்காக இப்படிச் செய்கின்றாளென்பது வாசகர்களுக்கு நாம் கூறுமலே நன்குவிளங்கும்.

ஒருநாள், பூங்காவனம் தனதுநாயகருக்குக்காலைப்போசனம் பரிமாறச் சந்தோஷமாக உணவருந்திக் கொண்டிருந்த ஜமீன்தார் என்னுடைய அருமையான பூங்காவனமே! சிறிதுநாளாக நீ மனமகிழ்ச்சியில்லாமல் இருக்கின்றாய், அதைவேறுவிதமான ஆடம்பரங்களினால் மாற்ற எண்ணியிருக்கின்றேன். உனது தந்தையாரும் மாமியாரும் இன்றுசாயங்காலம் இங்குவருவார்கள்; அவர்களேயன்றி நமது விவாகம் நடக்கும்பொழுதுபேருபகாரியாகவிருந்து நடத்தியருளிய திவான்பகதூர் அம்பலவாணபிள்ளை பீ. ஏ.,பீ.எல் அவர்களும் அவரின்மனைவி ஞானநாயகி அம்மையும் இன்னும்சில சுற்றத்தவர்களும் இங்குவந்து சிலவாரம்நின்று கொண்டாடிப்போவார்கள். இக்கொண்டாட்டம் உனக்குத்திருப்தியும் ஆனந்தமுமாகவிருக்குமல்லவா வெனலும் அவள் இயல்பான வார்த்தைகளை இனிமையுடன் கூறிநாயகனைமகிழச் செய்தாள். ஜமீன்தார் மீட்டும் காதலியே! இன்னும் ஒரு விருந்தாளி இங்கே வருவான். அவன்யாரெனில் எனது சகோதரனின் குமாரனாகிய சிசுபாலன் என்பவனே; எங்களுக்குச்சந்ததியில்லாத காலம் அவனே ஜமீன்பட்டத்துக்கு உரித்தானவனுவன். அவன் மதுரைக்கலாசாலையில் பிரதம ஆசிரியராகவிருந்து பின் சிறிதுநாளாகப் பிறதேசசஞ்சாரஞ்செய்து இன்று இங்கே வருகின்றான் என்றனர். அப்பொழுது பூங்காவனத்துக்குப்பழையஎண்ணங்கள் ஞாபகத்துக்கு வந்தன; வந்ததும் அதைமுகக்குறிப்பால் நாயகர் அறியாதபடி சாதுரியமாக நடந்துகொண்டாள்.

அன்று பிற்பகல் ஐந்துமணியளவில் ஜமீன்தார் வீட்டுவாயிலில் ஒருவண்டிவந்து நிற்க அதினின்றும் பூங்காவனத்தின் தந்தையாராகிய அருளானந்தமுதலியாரும் அத்தை மங்களமும் இறங்கிவர, அவள்தகப்பனாரை நமஸ்கரித்தும் மாமியாரைத் தழுவியும்

அன்புரிமை வார்த்தைகள் கூறி அழைத்துக்கொண்டு உள்ளே போனான். அருளானந்தமுதலியார் குமாரி பிரியாவிடை பெற்று வரும்பொழுது தாம் கூறியவைகளை மறந்துவிடாது அவைகளைப் பாதுகாத்து வருவதைக்குறிப்பாலறிந்து பேரானந்தக்கடலுள் மூழ்கினார். மாமியாராகிய மங்களம் மருகி ஜமீன்தாரின் பத்தினியாம் பெரும்பேற்றைப் பெற்றுமேம்பாட்டுடன் வாழ்வதனால் இறும்பூதும் தற்பெருமையு முடையளாய் அதனாலுண்டாகிய மகிழ்ச்சியை மனங்கொண்டமட்டும் அனுபவித்தனள். சிறிதுநேரஞ்சென்றபின் திவான்பகதூர் அம்பலவாணபிள்ளை பீ-ஏ, பீ, எல், அவர்களும் பாரியாரும் மூன்றுபிள்ளைகளும் வந்து ஜமீன்தாரின் குடும்பமத்தியில் சிரேஷ்டமாக விளங்கினார்கள். விருந்துக்கொண்டாட்டத்துக்கென அழைக்கப்பட்ட மற்றும் பிரபுக்களும் வந்து விட்டார்கள். கொண்டாட்டம் நடக்கவேண்டிய நேரமாகியும் ஜமீன்தாரும் மற்றும் இனஜனபந்துக்களும் ஒருவனுடைய வரவுக்கு எதிர்பார்த்திருந்தார்கள். பூங்காவனம் அவனுடைய வரவுக்குத்தன்னுள் அஞ்சி நடுநடுங்கிக்கொண்டிருந்தனள். அவன் ஜமீன்தாரின் சகோதரன் குமாரனாகிய சிசுபாலன் என்பவனே. அவன் வண்ணைமாபுரியில் இருந்தநாளில் ஒருநாளாவது பூங்காவனம் கண்டிராதபடியினாலும் அருட்பிரகாசம் தன்னை நேசித்திருந்ததைச் சகோதரனாகிய சிசுபாலனுக்கு ஒருகாலத்தும் கூறவில்லை யென்பதை நிச்சயமாக அறிந்திருந்ததனாலும் சிசுபாலனைக் கண்டால் உண்டாகும் மாறுபாட்டை விருந்தாளிகள் எங்கே கண்டு விடுவார்களோ அதனால்யாது நிகழுமோ வென்பனவேயன்றி ஜமீன்தாருக்குத் தனது பின்னோனுடன் பழையசிநேகத்தைக் கூறிவிடுவானென்று பயந்தல்ல; இன்னும் அவன் சகோதரனாகிய அருட்பிரகாசத்தின் முகச்சாயலாக விருந்தால் அவனுடைய எண்ணம் தனக்கு வர அதனால்தான். நாயகனுக்குப் பிடிகொடுத்தல் வேண்டுமென்பதினாலுமே. விருந்துக்கொண்டாட்டத்திற்குக் குறிப்பிட்டநேரம் தப்பியும் சிசுபாலன் வரவில்லை. சிறிதுநேரம்சென்றபின் ஜமீன்தார் முதன் முதல் ஆடவர்களுக்கு விருந்து கொடுத்தார். பூங்காவனம் பெண்களுக்கு விருந்து கொடுக்கக்கொண்டாட்டம் இனிது முடிந்துவிட்டது. அப்பொழுது அவ்வீட்டுவாயிலில் ஒரு வண்டிவந்து நிற்பதையும் அதினின்று சிசுபாலன் இறங்கிவருவதையும் எஜமானி கண்டு மனத்தைரியத்தை விட்டுவிடாமல், குதூகலமாயிருக்க, திவான்பகதூர் அம்பலவாணபிள்ளை பீ-ஏ, பீ-எல். அவர்கள்

அங்குவந்து பூங்காவனத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அது அவளுக்கு ஒருதற்காப்பாக விருந்தது. உடனே அவ்வறைக்கதவு திறக்கப்பட ஒருவேலைக்காரன் வந்து அம்மா! சின்ன எசமான் வந்துவிட்டனர் என்று கூற, ஜமீன்தார் அதற்குமுன்னரே எதிர்சென்று குமாரனைக் கட்டித்தழுவிக்கொண்டு, தமக்குப் பிள்ளையில்லாதகாலம் இவனை ஜமீன்பட்டத்துக் குரித்தாளியாக விருந்தும் இருபத்தொரு வயதுள்ள பேரழகியை விவாகஞ் செய்திருக்கின்றபடியால் கௌரவமாகத் தனக்குக் கிடைக்கும்பேறு கிட்டாதென்பதைப் பூரணமாக அறிந்தும் அதைப் பொருட்படுத்தாது அளவுகடந்த சந்தோஷப்படுகின்றான் என்பதைக் கவனித்துத் தம்மைப்போல மனப்பாக்கியசாலி வேறொருவரில்லையெனமேம்பாடு கொண்டு, மகனே! உன்வரவு நல்வரவாகுக; பிரதானமாக நீகாணவேண்டிய ஒருவரை உனக்குக்காட்டுகின்றேன் என்று கூறிப் பூங்காவனம் இருக்கும் இடத்துக்குக் கூட்டிக் கொண்டு போனார். அப்பொழுது அவள் இருந்த ஆசனத்தினின்றும் எழுந்து நின்றாள். மனதில் எவ்வளவோ அச்சமிருந்தும் அதைவெளிக்குக் காட்டவில்லை; ஆயினும் சிசுபாலனது முகத்தை ஏறிட்டுப்பார்த்தவுடன் மூளைதடுமாறியும் கண் மறைப்பாயும் இருந்தது. அப்பொழுது பக்கத்தேயிருந்த திவான் பகதூர் அவர்கள் ஏதோகேட்டார். அதை இன்னதென அவளால் அறிய முடியவில்லை. அவருடைய சத்தமும் அந்த இடத்திலிருந்த மற்றையோர்களுடைய சத்தமும் கூடி ஒருபேரிரைச்சலாக விருந்தது; பக்கத்தே ஆட்கள் வருகிறதாகத் தோற்றியது. நாயகர் எங்கள் குமாரனை இங்கேபார் என்று கூறியது தான் கேட்டது. அப்பொழுது சிசுபாலனைப் பார்த்துத் தனக்குத்தானே ஆச்சரியப்படக் கூடியதானதைரிய முண்டாக, குமாரனே! தற்போது நீர் எங்கள் வீட்டுக்குவந்தது மிகுந்தசந்தோஷம் என்று கூறுதலும் அவன் தனக்கு மூன்றுவயசுக்கு அவள் இளையவளாக விருந்தாலும் பெரியதாயார் என்னும் உறவுமுறைக்காகத் தாழ்மையான வந்தனஞ் செய்து ஓர் ஆசனத்தமர்ந் திருந்தனன். சிறிது நேரஞ் சென்றபின் திவான்பகதூர் அவர்களும் ஜமீன்தாரும் அவ்விடம் விட்டகன்றார்கள். சிசுபாலன் பெரியதாயாருக்குத் தான் போயிருந்த தேசங்களையும்; அவ்வத்தேசங்களின் நடவடிக்கைகளையும், அங்கங்குள்ள நூதனங்களையும், அவ்வவ்விடங்களில் தான்செய்து கொண்ட அரியவேலைகளையும் பெரியதந்தையார்மீது கொண்ட அன்பையும் அபிமானத்தையும் பற்றிக் கூறிக் கொண்டிருந்தான்.

மா-சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

வர்த்தமானம்.

நமது சக்ரவர்த்தியாரின் தோட்ட வேலை.

நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியார் தமது தோட்டங்களில் பூஞ் செடிகளையும், உணவிற்கு வேண்டிய காய் கனி தரும் செடிகளையும் திறமையாய் வைத்து வளர்க்கின்றனர். அவரால் வளர்க்கப் பட்ட செடிகளிலுண்டாகும் காய்கனிகளை அவரது அன்னையார் அலக்ஸாந்திரா மகாராணியார் பிரியமாக வுண்ணுகின்றனர்.

ஆணுடை தரிக்க விரும்பும் ஒரு ஸ்திரீ.

அமெரிக்காவில் வசிக்கும் ஒரு ஸ்திரீ அமெரிக்கப் பிரசிடெண்டு வில்லியம் என்பவரிடத்து ஆணுடை தரித்துக்கொள்ளத் தனக்குத் தாவு தரவேண்டும்; அதனால் தான் வாரத்தில் 3 பவுண்டு சம்பாதித்தல் கூடுமென்று மனுச் செய்திருக்கின்றனள்.

தூக்குக் காட்சியைப் பணங்கொடுத்துப் பார்ப்பவர்.

பாரிஸ் நகரில் தூக்குப்போடும் இடத்தை நோக்கியிருக்கும் வீடுகளுக்கு வருமானம் அதிகமாம். தூக்குப்போடுவதைப் பார்வையிட விரும்புவோர் ஷை வீதிகளின் முகப்பில் உட்காருவதற்கு 15 ஷில்லிங் (ரூபாய் 11-4-0) வீதம் கொடுக்கவேண்டுமாம்; பெருங் குற்றவாளிகள் தூக்குப் போடப்படுங் காலங்களில் 90 ரூபாய் வீதம் வாங்கப்படுகின்றதாம். தூக்குத் தண்டனையைப் பார்ப்பது மனிதருக்கு அருவருப்பாகவே யிருக்கும். அதற்காக ரூபாய் கொடுத்துப் பார்ப்பதும் விநோதமே!

அமிதவுணவுண்பவர்.

நாகரீகம் மிகுதியும் பெற்றவரென்று கருதப்படும் ஜாதியாருள், பிரிட்டிஷாரும், ஜர்மானியரும், பிரான்சுக்காரரும், அமெரிக்கரும் தாம் அதிக போஜனப்பிரியராம். நுட்ப புத்தியுடையவர்களா யில்லாதிருக்கும் ஸ்பானியரும், இத்தாலியரும், பிரிட்டிஷார் ஜர்மானியர் உண்ணும் உணவினும் குறைந்த சத்துள்ள உணவே உண்ணுகின்றார்களாம். அமெரிக்கர்தாம் உலகத்திலுள்ள ஜாதியார்களெல்லாருள்ளும் அமிதமான உணவு உண்பவர்களாம்.

மனையாளுக்கஞ்சி வைக்கோற்போரைக் கொளுத்திய ஒரு மடையன்.

யாழ்ப்பாணத்திலுள்ள தெய்வலேயைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் வசிக்கும் ஜேம்ஸிங்கோ என்பவன் அக் கிராமத்திலுள்ள ஒரு தொகையான வைக்கோற் போரைத் தீ வைத்துக் கொளுத்தி நாசமாக்கினான். அப்போர் 210 ரூபாய் மதிப்புடையதாம். கோர்ட் விசாரணையில் அவன் அவ் வைக்கோற்போர்க் குரியவர்களுள் ஒருவன் என் மனைவியோடு சிநேகமாயிருப்பதுபற்றி, அவ்வாறு செய்துவிட்டேன் என்று கூறியிருக்கின்றான்.

நியூயார்க் கவர்ன்மெண்டாரின் நீதி.

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் கவர்ன்மெண்டார் ஹோட்டல்கள், நாடகசாலைகள், வாசகசாலைகள், ரயில்கள், கப்பல்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் ஜாதிமத வித்தியாசம், நிறபேதம், தேசவேற்றுமை என்னுமிவற்றை யெவரும் பாராட்டுதல் கூடாது; இந்துக்கள் ஐரோப்பியர் அமெரிக்கரென்று பேதம் பாராட்டாது யாவரையும் சமமாகப் பாவித்தல் வேண்டுமென்று புதுவதாக ஒரு சட்டமுண்டாக்கி யிருக்கின்றனர். இச்சட்டம் அங்கு இம்மாதம் முதற்றேதி முதற்கொண்டு அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இச்சட்டத்தைக் கடந்து நடப்பவர்க்கு 20 பவுண்டிற்குக் குறையாமலும் 200 பவுண்டிற்கு மேற்படாமலும் அபராதமாவது ஒரு மாதத்திற்குக் குறையாது மூன்று மாதத்திற்கு மேற்படாது தண்டனையாவது விதிக்கப்படுமென்று அக்கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கின்றனர். இந்துக்களை ஆடுமாடுகளினும் கீழாகக் கருதி நடத்தும் தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் நியூயார்க் கவர்ன்மெண்டார் செய்துள்ள இச்சட்டத்தைப் பின்பற்றி யொழுகுமாறு நமது பிரிட்டிஷ் கவர்மெண்டார் சட்டமேற்படுத்துவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

சிறுத்தையால் காயமடைந்தவன்.

மேட்டுப்பாளையத்தில் 19-வயதுள்ள ஒருவன் சில நாய்களோடு சென்று தனது வயலில் உழுதுகொண்டிருக்கும்போது, ஒரு சிறுத்தை வந்து அவன்மீது பாய்ந்தது. அதனால் அவன் படுகாயமடைந்து தப்பினான். அவனுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு சுகமடைந்தான்.

தஞ்சாவூர் சமஸ்தானம்.

தஞ்சாவூரைக் கடைசியாக ஆண்ட மகாராஜாவின் பௌத்திரர்களாகிய ஸீனியர் சிவாஜிராவுக்கு 800 ரூபாயும், ஜூனியர் பிரதாபசிங்குக்கு 400 ரூபாயும் மாதந்தோறும் பென்ஷன் கொடுக்குமாறு கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கின்றனர்.

அமெரிக்காவிற்குச் சென்று இந்தியாவிற்கு வந்த சத்திய தேவரென்பவர் சென்ற மாதம் 14-ந் தேதி அலஹாபாத்தில் "இருபதாவது நூற்றாண்டில் இந்தியாவின் கடமை" என்பது பற்றிப் பிரசங்கஞ் செய்தார்; பாபுபுருஷோத்தம் தண்டன் என்பவர் அக்ராசனம் வகித்திருந்தார். அப்போது அவர், இந்தியாவில் நடந்து வரும் ஜாதிமதச் சண்டைகள் அறவே ஒழிந்துபோக வேண்டுமென்றும், இந்தியா தேசம் மேல் நிலைமை யடையுமாறு செய்வதுதான் ஒவ்வொரு இந்துவின் கடமையாமென்றுங் கூறினர். ஜாதிமதச்சண்டைகள்தாம் நம்மனோருக்குக் கேட்டைத் தந்தன வென்பதை யோராது இன்னும் அக்கோட்பாடுகளில் தலையிட்டுக்கொண்டு பலதலைப்பட்டுப் போதும் நம்மனோர் எங்ஙனம் மேல் நிலைமையை யடைதல் கூடும்?

கதாமஞ்சரி.

இஃதொரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கொண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கியிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பாத கண்டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவர்த்திக்குமாறு இக்கதை சோமதேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும் இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

சந்தாவிவரம்.

வருஷம் 1க்கு ரூ.	1	0	0
ஆறு மாதத்திற்கு	0	10	0
தனிப்பிரதி	0	2	0
வெளித் தேசத்திற்கு			
வருஷம் 1-க்கு	1	8	0
ஆறு மாதத்திற்கு	0	14	0
தனிப்பிரதி	0	3	0

விளம்பர விகிதம்

மாதம் 1க்கு பக்கத்திற்கு	1	0	0
,, $\frac{1}{2}$ பக்கத்திற்கு	0	10	0
,, $\frac{1}{4}$ பக்கத்திகற்கு	0	6	0
சில்லரை விளம்பரங்ளுக்கு வரி 1க்கு அணு	0	1	0

மாநேஜர், லோகோபகாரி ஆபீசு,

கோமளீசுவரன் பேட்டை, சென்னை.